முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 15 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 22 திகதி வரை

(31.07.2022 ஞாயிறு முதல் 07.08.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மாதவ மூர்த்தியே ஆறுமுக அரங்கா
   மக்களை கலியினில் காத்திடவே
   மாதவ பலமாய் வந்த தேசிகா
   மகான் நீ கேட்க இனிதே
2. இனிதே இந்தியா தமிழகம் தன்னில்
   இயம்பிட சுபகிருது நள்ளி திங்கள்
   துணிவுபட மூவைதிகதி மேல் இருபானீர்திகதி வரை
   தேசமதில் நடக்கும் நிகழ்வாக வருங்கால பலன் குறித்த
3. குறித்த வார ஆசிதன்னை
   கும்பமுனி யானும் உரைப்பேன்
   தெரிவிப்பேன் தமிழகம் தன்னில்
   தேசநலம் காணும் வண்ணம்
4. வண்ணமுடன் கல்வி சாலைகள்
   வரையறை செய்யப்பட வேணும்
   நன்னயமாய் அரசே நடத்துகின்ற
   நம்பகத்தன்மை மிக்க கல்வி நிறுவனம்
5. நிறுவனங்கள் பெருக வேண்டும்
   நிதிசார்ந்த செயல்பாடில்லா
   நிறுவனமாக கல்விசாலை இனி
   நீதிவழியில் பெருக வேண்டும்
6. வேண்டுமே வருங்காலத் தலைமுறைகளை
   வரையறுக்கும் வழிநடத்தும் வண்ணம்
   தொண்டுள்ளம் கொண்ட சேவை
   தூய்மை நிறைந்தபடி நிறுவனங்களாகவே
7. ஆகவே இனிவருங் காலமேனும்
   ஆளுமைகள் கட்டுப்பாடுகள்
   வகைபட விதித்து செயல்பட
   வருங்காலத் தலைமுறைகள் தானும்
8. தானுமே உயிர்பாதுகாப்புற
   தரிவையர்கட்கும் பாதுகாப்புற
   ஞானம் தரும் வண்ணமாக
   நாட்டின் கல்வி சாலைகள் அமைந்து

9. அமைந்துமே வரும் சமூகம்
அழிவில்லா உயர்படைப்புகளாக
அமைந்திடும் ஆபத்தில்லா காலமாக
ஆளுமைகள் மேலும் கீழுமாக சிறந்து

10. சிறந்து எங்கும் எதிலும்
சேவை நிரம்பிய வண்ணம்
பரந்த இந்தியாதமிழகம் தானும்
பாதுகாப்பும் வளர்ச்சியும் காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆடி மாதம் 15ம் நாள் 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 22ம் நாள் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

எல்லையில்லாது தவங்களை செய்து வெற்றி பெற்றிட்ட மாதவ மூர்த்தியேஆறுமுக அரங்கமகா தேசிகனே! தாம் செய்திட்ட அளவிலாத தவத்தின் பயனாய் முருகப்பெருமானின் சக்தி வடிவமாய் அவதரித்திட்ட ஞான தேசிகனே ஆறுமுக அரங்க மகா தேசிகனே! மகானே அரங்கா தாம் கேட்க இந்தியா தமிழகத்திலே சுபகிருது வருடம் ஆடிமாதம் 15ம் நாள் 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 22ம் நாள் 07.08.2022 ஞாயிற்று கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக கும்ப முனியாகிய அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஞான பூமியாம் தமிழகத்தில் கல்வி நிறுவனங்கள் தேசநலம் காத்திடும் வகையில் சிறப்புடன் செயல் புரிய வேண்டும். அவை தேச நலனை அடிப்படையாக கொண்டு வரையறை செய்யப்பட வேண்டும். அரசு நடத்தும் அரசாங்க கல்வி நிறுவனங்கள் அதிகமாக தோற்றுவிக்கப்பட வேண்டும்.

கல்வி சாலைகள் கல்வியை அடிப்படையாக கொண்டு செயல்பட வேண்டுமே அன்றி நிதிக்காக வியாபார நோக்கோடு செயல்படாதவாறு காக்கப்பட்டு நீதி மிக்க கல்வி சாலைகளாக செயல்பட வேண்டும்.

கல்வி கூடங்கள் வருங்கால தலைமுறைகளை வரையறுப்பதுடன் கட்டுப்பாடான சமூகம் உருவாகவும், வழிநடத்தும் சமூகமாக உருவாக நல்ல மாணாக்கர்களை உருவாக்கும் விதமாக தொண்டுள்ளத்துடன் கூடிய சேவையும், தூய்மையும் நிறைந்த நல்நிறுவனங்களாக கல்வி கூடங்கள் செயல்பட வேண்டும்.

ஆதலினாலே இனிவரும் காலங்களிலேனும் ஆட்சியர்கள் கட்டுப்பாடுகளை விதித்து செயல்பாடுகளை செய்துவர வருங்கால தலைமுறைகள் சிறப்படையும் மாணவ மாணவிகளுக்கு பாதுகாப்பும், உயிர்பாதுகாப்பும் மிக்கதாக கல்வி கூடங்களாக அமைந்து வருங்கால சமூகம் நிலையான உயிர்களை உருவாக்கும் நல் கூடங்களாக அமைந்திடும். ஆபத்தில்லா காலமாக மாறி அரசுகளும் சிறப்படைந்து எங்கும் எதிலும் சேவை மனப்பான்மை பெருகி தொண்டுகள் பெருகி இந்தியா தமிழகம் நல்ல வளர்ச்சியையும் பாதுகாப்பையும் பெற்று சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–